# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 303/மா/2023**
**நாள் : 26.10.2023**

திரு. G. வெங்கடேஷ்,
கச்சிராயப்பாளையம் - 606 207. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், எண்.233, LF ரோடு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவரின் 3.10.2023 நாளிட்ட மனு 09.10.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 303/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், எண்.233, L.F. ரோடு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவரின் 3.10.2023 நாளிட்ட மனுவில்

நான் சென்னை மடிப்பாக்கத்திலுள்ள என் உறவினரை பார்ப்பதற்காக கடந்த 12.08.2023 அன்று மடிப்பாக்கத்திற்கு காரில் வந்திருந்தேன். அப்போது நான் ஒரு வேலையாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14 அலுவலகம் அமைந்துள்ள சாலை வழியாகவும், மேலும், மடிப்பாக்கம் ஏரிக்கரை பிரதான சாலை வழியாகவும் செல்ல நேரிட்டது. அப்போது மேற்படி சாலைகளில் மாடுகள் எந்தவித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக சாலையில் செல்வோருக்கு விபத்தை ஏற்படுத்தும் வண்ணம் சாலையில் சுற்றி திரிந்தும், சாலையில் படுத்துக்கொண்டும் இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது.

மேற்படி நிகழ்வு பற்றி பொதுமக்களிடம் நான் விசாரித்தபோது மடிப்பாக்கம் ஏரிக்கரை பிரதான சாலைக்கருகாமையில் ஒருவர் மாடுகள் வளர்ப்பதாகவும் அதே போன்று சென்னை மாநகராட்சி மண்டலம் - 14 அலுவலகத்திற்கு எதிரிலேயே மற்றும் ஒருவர் மாடுகள் வளர்ப்பதாகவும் எனக்கு தெரியவந்தது. இவர்கள் காலை மற்றும் மாலை வேளைகளில்

மாடுகளிடமிருந்து பாலை கறந்தவுடன் மாடுகளை எந்தவித கட்டுப்பாடுமின்றி சாலைகளில் அவிழ்த்துவிடுவதாக தெரியவருகிறது.

இது பற்றி தக்க நடவடிக்கை எடுத்து, எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி கடிதம் மூலம் தகவல் எனக்கு தெரிவிக்கக் கோரி கடந்த 14.08.2023 தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலருக்கும் விரைவு அஞ்சல் மூலம் நான் புகார் அனுப்பி இருந்தேன். அதன் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலரும் எனக்கு இதுவரை கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கவில்லை. மேற்படி உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியுள்ளார். இது தமிழ்நாடு அரசு பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அரசாணை எண்.99, நாள்:21.09.2015க்கு எதிரானதாகும். இந்த அரசாணையின்படி பொது மக்கள் அரசு அதிகாரிகளிடம் கொடுக்கும் மனுக்களின் மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து அதன் முழு விவரங்களை சம்மந்தப்பட்ட நபருக்கு தெரிவிக்க வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14க்கு உட்பட்ட பகுதிகளில் சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளை பிடிக்கும் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் கன்று குட்டிகளை வாகனத்தில் ஏற்றிச்சென்று பிடித்த இடத்திலேயே சாலையிலேயே பொறுப்பின்றி அவிழ்த்து விடுவதாக கடந்த 16.08.2023 நாளிட்ட Times of India பத்திரிக்கை சென்னை பதிப்பில் வெளியாகி உள்ளது. இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ஐச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சட்டப்படி தங்கள் கடமைகளை செய்யாமல் புறக்கணித்து பொதுமக்களுக்கு தீங்கு இழைத்துள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -14 அலுவலகத்துக்கு எதிரிலேயே ஒரு நபர் சாலையில் மாடுகளைக் கட்டி காலையிலும், மாலையிலும் பாலைக் கறந்துவிட்டு தெருவில் அவிழ்த்துவிட்டு விடுகிறார். அந்த மாடுகள் சென்னை மாநகராட்சி மண்டலம்-14 அலுவலகத்துக்கு எதிரிலேயே சாலையில் தினமும் பொது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக படுத்துக்கொண்டு விபத்தை ஏற்படுத்தும் வண்ணமாக உள்ளன. இது பற்றி சென்னை மாநகராட்சி மண்டலம்-14 அலுவலர் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதேபோன்று சென்னை மடிப்பாக்கம் ஏரிக்கரையிலும் ஏராளமான மாடுகள் எந்தவித கட்டுப்பாடுமின்றி சாலையில் சுற்றித் திரிந்து விபத்தை ஏற்படுத்துகின்றன. மேற்படி மாடுகளின் உரிமையாளர்கள் மீது சென்னை மாநகராட்சி எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அப்படியே நடவடிக்கை எடுத்தாலும் அது கண் துடைப்பு நடவடிக்கையாக உள்ளது. பொதுச் சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது சென்னை மாநகராட்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தும் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதில்லை.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14க்குட்பட்ட பகுதிகளில் பொது சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகள் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் மண்டல அலுவலர் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் மாடுகள் சென்னை மாநகராட்சி மண்டலம்-14க்குட்பட்ட பகுதிகளில் பொது சாலைகளில் சுற்றித் திரியாவண்ணம்

நிரந்தர நடவடிக்கை எடுக்குமாறு தங்களை நான் அன்புடன் வேண்டுகிறேன். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது சென்னை மாநகராட்சி காவல் நிலையத்தில் புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பொது நலன் கருதி தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு நான் மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை வேண்டுகிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 18.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 13.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**18.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ன் மண்டல நல அலுவலர் 18.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார் :**

> பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல், சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகள் குறித்து புகார் மனுக்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சுற்றித் திரியும் மாடுகள் மாநகராட்சியைச் சேர்ந்த Cattle Catcher மூலம் பிடிக்கப்பட்டு, அவை புதுப்பேட்டையில் உள்ள மாடுகள் அடைக்கும் கொட்டகையில் விடப்படுகின்றன. மேற்கண்ட மாடுகளுக்கு சொந்தக்காரர்கள் அவற்றை தேடி வரும்போது அவர்களிடம் கால்நடை பராமரிப்புக் கட்டணம் மற்றும் அபராதம் ஆகியவை வசூலிக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்படுகின்றன, எனவே, தற்போது மேற்கண்ட பகுதியில் மாடுகள் சுற்றித் திரிவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பெருநகர மாநகராட்சி மண்டலம்-14 அலுவகத்தின் எதிரில் மாடுகள் தற்போது கட்டப்படுவதில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 14ன் மண்டல நல அலுவலர் வாக்குமூலம் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

> பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14 அலுவலகம் அமைந்துள்ள சாலையில் மாடுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக சாலைகளில் செல்வோருக்கு விபத்தை எற்படுத்தும் வண்ணம் சுற்றித் திரிந்தும், சாலையில் படுத்துக்கொண்டும் இருப்பதும், மண்டலம் -14-ஆம் அலுவலகம் எதிரிலேயே ஒருவர் மாடுகள் வளர்ப்பதாகவும், காலை, மாலை அம்மாடுகளில் பால் கறந்து விற்பனை செய்வதும் தெரியவந்ததை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலகத்திற்கு புகார் அளித்ததாகவும், ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து, தன் மனு மீது உரிய உத்திரவினை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

இம்மனு மீதான நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் தான் உள்ளூரில் வழக்கு சம்பந்தமாக இருக்கவேண்டியுள்ளதால், நேரடி விசாரணைக்கு தான் ஆஜராக இயலாது என்றும், தன்னுடைய மனு மீது தகுதியின் (merits) அடிப்படையில் தீர்வு அளிக்குமாறு 17.10.2023 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ல் சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளை மாநகராட்சியைச் சேர்ந்த Cattle Catcher மூலம் பிடிக்கப்பட்டு அவை புதுப்பேட்டையில் உள்ள மாடுகள் அடைக்கும் கொட்டகையில் விடப்படுகின்றன என்றும், மாடுகளின் சொந்தகாரர்கள் அவற்றை தேடி வரும்போது அவர்களிடம் கால்நடை பராமரிப்புக் கட்டணம் மற்றும் அபராதம் ஆகியவை வசூலிக்கப்பட்டு பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்பதும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ல் சுற்றித்திரியும் மாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும், மண்டலம்-14 அலுவலகம் எதிரில் மாடுகள் தற்போது கட்டப்படுவதில்லை என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் மண்டல நல அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளில் மாடுகள் சுதந்திரமாக சுற்றித்திரிவதும், அவற்றினால் பள்ளி மாணவ / மாணவியர்கள் மற்றும் வயதானவர்கள் தாக்கப்படுவதும் பத்திரிக்கைகளில் செய்தி வந்த வண்ணம் உள்ளது. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தகுந்த உத்திரவு பிறப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகும். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியின் கள பணியாளர்கள் இதனை நடைமுறைப்படுத்தாமல் அலட்சியமாக செயல்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

Tamil Nadu Local Bodies Act 2023ல் பிரிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

Impounding of stray animals –

(1) No person shall milk or cause or permit to be milked any cow or buffalow or other animal in any public street or place.

(2) No person shall allow any animal to be strayed in any public street or public place.

(3) Notwithstanding anything contained in any other law for the time being in force the Commissioner may cause to remove and impound any animal being milked or any animal found straying in any public street or other public place in accordance with such rule as may be prescribed.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி கள அலுவலர்கள் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்திட இன்னும் மிக தீவிர நடவடிக்கை எடுத்து பள்ளி மாணவ/ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள் பாதுகாப்பாக சாலைகளில் நடமாட உறுதி செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாத பெருநகர சென்னை மாநகராட்சி களப் பணியாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. G. வெங்கடேஷ்,
233, LF ரோடு,
கச்சிராயப்பாளையம் - 606 207,
சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3) மண்டல அலுவலர்,
மண்டலம்-14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.
4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்